Since-2000
Dr.HARIHARAN'S
தென்றல் IAS அகாடமி
An ISO 9001-2015 CERTIFIED INSTITUTION
PARINAGAR, KARAIKUDI. CONTACT: 98435 88767, 99435 55767

# INM

## (i) 1.தேசிய மறுமலர்ச்சி

- பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் கால் பகுதியில் இந்தியாவில் பல சீர்த்திருத்தங்கள் உருவாயின அவை ஆங்கில நிர்வாகம் ஆங்கிலக்கல்வி ஐரோப்பிய இலக்கியங்கள் மற்றும் கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்கள் இன் பணிகள்.
- ஆங்கில செல்வாக்கின் தாக்கத்திற்கு பாடுபட்ட முதல் மாகாணம் வங்காளம் ஆகும்.
- நமது நன்னெறி சிந்தனைகள் மனித இனத்தின் பரிமாணம் இயற்கை உரிமைகள் ஆகியவை இந்திய மறுமலர்ச்சிக்கு வித்திட்டன.
- நம்முடைய சிந்தனைகளை பரப்புவதில் முக்கிய பங்கு வகித்தது. அச்சுத் தொழில் நுட்பம்.
- இந்திய சமுதாயத்தில் ஒட்டுமொத்த பண்பாட்டு நீரோட்டத்தை உள்வாங்கிக் கொண்ட இவ்வியக்கங்கள் மொழி மதம் கலை தத்துவம் ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தின.

**இந்த இயக்கங்கள் இரண்டு வகைப்படுத்தலாம்:-**

- 1.சீர்திருத்த இயக்கங்கள்
- 2.மீட்பியக்கங்கள்
- இந்த இரண்டு இயக்கங்களும் தாங்கள் மீட்டெடுக்க உள்ள மதம் இழந்துவிட்ட தூய்மையைப் பற்றி மாறுபட்ட அணுகுமுறைகளை கொண்டிருந்தன.
- அடிப்படையில் சமூக சீர்திருத்த இயக்கங்கள் மத சீர்திருத்தங்கள் ஓடு ஒருங்கிணைந்த ஒரு பகுதியாகவே இருந்தன.

**பிரம்ம சமாஜம் 1828:-**

- ராஜாராம் மோகன்ராய் பிரம்ம சமாஜத்தை நிறுவினார்.
- எங்கும் நிறைந்துள்ள கண்டறிய முடியாத மாற்றமுடியாத இவ்வுலகை உருவாக்கி பாதுகாக்கும் சக்தியை வணங்கி வழிபடுவதில் பிரம்ம சமாஜம் உறுதியாய் இருந்தது.
- ஒரு கடவுள் பழிபாட்டை போதித்தல் உருவ வழிபாட்டை எதிர்த்து உடன்கட்டை ஒழித்தல் மனித நேயத்துக்கு முக்கியத்துவம் தருதல் ஆகியள ராஜாராம் மோகன்ராயின் நீண்டகால திட்டங்களாகும்.
- இவ உடன்கட்டை ஏறதலுக்கு எதிரான மன உறுதி மிக்க போராளி ஆவார்.
- 1818-ல் அவர் எழுதிய கைம் பெண்களை உயிரோடு எரிக்கும் பழக்கத்தை ஆதரிக்கும் எதிர்க்கும் இடையே நடைபெற்ற விவாதம் என தலைப்பிடப்பட்ட கட்டுரையில் எந்த மதமும் கைம் பெண்களை உயிரோடு எரிப்பது ஏற்றுக்கொள்ள வில்லை என்பதை சுட்டிக்காட்டி நிரூபித்தார்.
- 1829-ம் ஆண்டு உடன்கட்டை ஏறுதல் குற்றம் என சட்டம் இயற்றி அவருடைய முயற்சிகள் வெற்றி அடைந்தன.
- ஜாதிமுறை மூடநம்பிக்கைகள் ஆகியவற்றுக்கு கண்டனம் செய்தது கைம்பெண் மறுமணத்தை ஆதரித்தார்.
- குழந்தை திருமணம் பர்தா முறை ஆகியவை ஒழிக்கப்பட வேண்டும் என கோரியது.
- பிரெஞ்சு புரட்சியின் கோட்பாடுகளால் ஈர்க்கப்பட்டு ஐரோப்பா சென்ற ராஜாராம் மோகன்ராய் பிரிஸ்டல் நகரில் மரணம் அடைந்தார்.
- இதன்பின்னர் ரவீந்திரநாத் தாகூரின் தந்தையார் தேவேந்திரநாத் தாகூர் இவ்இயக்கத்திற்கு புத்துயிர் அளித்தார்.
- 1857 முதல் கேசவ சந்திர சென் இவ்இயக்கத்தை முன்னெடுத்துச் சென்றார்.
- 1765-ல் இந்த இயக்கம் 54 கிளைகளைக் கொண்டிருந்தது இதில் 50 கிளைகள் வங்காளத்திலும் வடமேற்கு மாகாணத்தில் இரண்டு கிளைகளும் பஞ்சாபில் ஒன்றும் தமிழ்நாட்டில் ஒன்றும் இருந்தது.
- இவ்வியக்கம் இரண்டாக பிரிந்தது. தேவேந்திரநாத் தாகூரின் தலைமையில் இயங்கிய இந்திய பிரம்ம சமாஜம்.
- கேசவ சந்திர சென் தலைமையில் இயங்கிய சதாரன் பிரம்ம சமாஜம்

- தமிழ்நாட்டில் பிரம்ம சமாஜத்தின் ஆதரவாளரான சைதை காசிவிஸ்வநாத முதலியார் பிரம்ம சமாஜ நாடகம் என்னும் நாடகத்தையும் கைம்பெண் மறுமணத்திற்கு ஆதரவாக ஒரு கட்டுரையும் 1864 தத்துவ போதினி என்னும் தமிழ் இதழ் தொடங்கினார்.
- பிரம்ம சமாஜம் வங்காளம் சமூகத்தின் வைதீகப் பிரிவினரிடமும் இந்து தர்ம சபை பொன்ற அமைப்புகளிடமும் பெரும் எதிர்ப்பை சந்தித்தது ஆனால் ஈஸ்வர சந்திர வித்யாசாகர் போன்ற சீர்திருத்தவாதிகள் ஆதரவாய் இருந்தனர்.
- பிரம்ம சமாஜம் பெரும்பாலான அளவில் மக்களை ஈர்க்கவில்லை எனினும் அறிவுஜீவிகளின் மேல் தாக்கத்தை ஏற்படுத்தியது.

**பிரார்த்தனை சமாஜம் 1867:-**

- 1867-ல் பம்பாயில் ஆத்மாராம் பாண்டுரங் என்பவரால் நிறுவப்பட்டது. இது பிரம்ம சமாஜத்தின் கிளை அமைப்பு
- இந்த அமைப்பில் எம்ஜிர் ஆனதே ஆர்ஜி பண்டார்கள் சேர்ந்து வலிமை ஆக்கினர்.
- ஆனாலும் பிரார்த்தனை சமாஜம் ஒரு அமைப்பு என்ற அளவில் பெரும் செல்வாக்கு பெற்றிருக்கவில்லை.
- இவ் அமைப்பின் உறுப்பினர்களான ரானடே பண்டார்கர் தெலங் போன்றோர் மகாராஷ்டிராவில் 19-ம் நூற்றாண்டைச் சேர்ந்த மாபெரும் தலைவர் ஆகினர் பின்னர் அவர்கள் சமூக சீர்திருத்த இயக்கங்களில் நிறுவினர்.
- பிரார்த்தனை சமாஜம் மகாராஷ்டிராவை சேர்ந்த துறவிகளின் பக்தி மரபுகளோடு தொடர்பை கொண்டிருந்தது.
- பெண்கள் தொழிலாளர் ஆகியோருக்கு கல்வி வழங்குவதன் மூலம் தனது பணியை தொடர்ந்தது.
- சமபந்தி விருந்து ஜாதி மறுப்பு திருமணம் விதவை மறுமணம் ஆகிய சமூக சீர்திருத்ததப் பணிகளில் கவனம் செலுத்தியது.
- ரானடே உருவாக்கிய தேசிய சமூக மாநாடு எனும் அமைப்பு இந்திய தேசிய காங்கிரஸ் மாநடு நடைபெற்று முடிந்தவுடன் கூடும்.
- விதவை மறுமண சங்கம் என்னும் அமைப்பை உருவாக்கியவர்களில் இவரும் ஒருவர்.
- தக்காண கல்வி கழகம் என்னும் புகழ்பெற்ற அமைப்பை தீவிரமாக முன்னெடுத்துச் சென்றார்.
- இவர் 1901-ல் இயற்கை எழுதிய போது சந்திர வர்க்கர் தலைமைப் பொறுப்பேற்றார்.

**ஆரிய சமாஜம் 1875:-**

- ஆரிய சமாஜத்தை உருவாக்கியவர் தயானந்த சரஸ்வதி.
- இவர் 1824 இல் பிறந்து 1883-ல் மறைந்தார்.
- குஜராத்தை சேர்ந்த இவர் துறவியாகும் எண்ணத்தில் இளமையிலே வீட்டை விட்டு வெளியேறினார்.
- 17 ஆண்டுகள் இந்தியா முழுவதும் சுற்றி அலைந்தார்.
- 1863-ல் பல ஊர்களுக்கு சென்று தனது கருத்துக்களைப் போதித்தார்.
- 1872-ல் கல்கத்தாவில் பிரம்ம சமாஜ உறுப்பினர்களை சந்தித்தார்.
- 1875-ல் சத்யாத்த பிரகாஷ் என்னும் முக்கிய நூலை வெளியிட்டார்.
- இவர் இந்து மதம் சீர்கேடு அடைந்து விட்டது என வேதங்களை நோக்கி திரும்புக என அழைப்பு விடுத்தார்.
- அதே சமயம் புராணங்களை புறக்கணித்தார்.
- இவர் பஞ்சாப் பகுதிகளில் செல்வாக்கு பெற்று திகழ்ந்தார்.
- பஞ்சாபில் இந்து முஸ்லிம் சீக்கியர் இடையே பெருமளவில் வகுப்புவாத மோதம் நடைபெற்றது.
- தயானந்தரின் சுத்தி இயக்கம் இந்துக்கள் அல்லாதவர்களை இந்துக்களாக மாற்ற முயன்று பெரும் எதிர்ப்புகளை குறிப்பாக அகமதியாக இயக்கத்தின் எதிர்ப்புகளைச் சந்தித்தது.
- ஆரிய சமாஜம் ஒரு மீட்டெடுப்பு இயக்கமாக கருதப்படுகிறது.
- ஆங்கிலோ வேத பள்ளிகள் DAV மற்றும் கல்லூரிகள் நிறுவப்பட்டதன் மூலம் தயானந்தன் செல்வாக்கை இருபதாம் நூற்றாண்டில் தொடர்ந்தது.

**ராமகிருஷ்ண இயக்கம்:-**

- ராமகிருஷ்ண பரமஹம்சரின் நினைவாக ராமகிருஷ்ண மிஷன் உதயமானது.
- இவர் கல்கத்தாவுக்கு அருகே உள்ள தட்சினேஸ்வர் என்னும் ஊரில் உள்ள கோவிலின் ஏழை பூசாரி ஆவார்.
- இவர் அனைத்து மதக் கருத்துகளும் ஒரே இலக்கை சென்றடையும் பல்வேறு பாதைகள் என்றுரைத்தார்.
- இவர் தன் கருத்துக்களை கடைகள் மற்றும் வியக்கத்தக்க உமமைகள் மூலமாக விளக்கினார்.
- இவருடைய கருத்துக்கள் அனைத்தையும் ராமகிருஷ்ணா காதா மிர்தா என்னும் தலைப்பில் தொகுப்பட்டது.
- இவருடைய சீடர்களில் மிகவும் புகழ் பெற்றவர் சுவாமி விவேகானந்தர்.
- விவேகானந்தர் கல்கத்தா பல்கலைக்கழகத்தில் பட்டம் படித்தவர்.
- இவருடைய காலம் 1863-ல் இருந்து 1902.
- இவர் தன் குருவின் கருத்துக்களை இந்தியா மற்றும் உலகம் முழுவதும் கொண்டு சேர்த்தார்.
- 1893-ல் அமெரிக்காவில் சிகாகோ நகரில் நடைபெற்ற புகழ்பெற்ற உலக சமய மாநாட்டில் பங்கேற்று அங்கு கூடியிருந்தோர் மேல் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தினார்.
- இவ்வியக்கம் பள்ளிகள் மருத்துவமனைகள் ஆதரவற்றோர் இல்லங்கள் ஆகியவற்றை நிறுவியது.

- இயற்கை பேரழிவுகளும் மனிதர்களால் ஏற்பட்ட பேரழிவுகள் ஆளும் மக்கள் துயருற்ற போது அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டியது.
- நவீன இந்தியாவின் விடிவெள்ளி என போற்றப்படுபவர் சுவாமி விவேகானந்தர்.
- தனது ஆளுமை திறனால் வெளிநாடுகளில் இந்தியாவின் பாரம்பரியமிக்க நாகரிகத்திற்கும் அதனுடைய புதிதாக பிறப்பு எடுத்துள்ள தேசம் என்னும் உரிமை கோரிக்கைகளுக்கும் கண்கூடான அங்கீகாரத்தை பெற்று தந்த முதல் இந்தியர் விவேகானந்தர் எனக் கூறியவர் வாலன்டைன் சிரோல்.

**பிரம்ம ஞான சபை:-**

- 1875-ல் பிளாவட்ஸ்கி அம்மையார் கர்னல் ஆல்காட் ஆகியோரால் அமெரிக்காவில் நிறுவப்பட்டது.
- 1879-ல் இந்தியா வந்தவர்கள் 1886-ல் இவ்வமைப்பின் தலைமை இடத்தை சென்னை அடையாறில் அமைத்தனர்.
- 1893-ல் இந்தியாவிற்கு வந்த அன்னிபெசன்ட் அம்மையாரின் தலைமையில் பிரம்மஞான சபை வலுப்பெற்றத.
- இந்து பாரம்பரியத்தை மேற்கத்திய அறிவுஜீவிகள் ஒத்துக் கொண்டதில் அவர்கள் பெருமை கொண்டனர்.
- இவ்வமைப்பு இந்தியாவில் பௌத்தம் மீண்டும் உயிர் பெற்றதில் முக்கிய பங்கு வகித்தது.
- அயோத்திதாச பண்டிதர் ஹென்ரி ஆல்காட்டுடன் கொண்ட தொடபின் காரணமாக நவீன பௌத்தத்தை அறிமுகப்படுத்தினார்.
- ஆல்காட் அயோத்திதாசரை இலங்கைக்கு அழைத்துச் சென்று அங்கு அவர் புகழ்பெற்ற மீட்பு வாதிகளான அனகரிகா தர்மபாலா ஆச்சாரியா சுமங்களா உட்பட்ட பல பௌத்த பிட்சுக்களை சந்தித்தார்.

**சத்திய சோதக் சமாஜம் 1773:-**

- இதுவரை விவாதிக்கப்பட்ட இயக்கங்கள் பெரும்பாலும் மேல் சாதியாக கருதப்பட்ட சமூகங்களின் மீது அதிக கவனம் செலுத்தியது.
- ஆனால் சத்திய சோதக் சமாஜம் ஒடுக்கப்பட்ட சமூகங்கள் அணிதிரட்டி அவர்களிடம் தங்கள் கொள்கைகளை விளக்கினர். அவற்றுள் மிக முக்கியமான இயக்கம் ஜோதிபா புலேயின் சத்திய சோதக் சமாஜம் ஆகும்.
- இவர் 1827-ல் பிறந்தார் இவர் ஒரு தோட்ட வேலை செய்வோர் சமூகத்தைச் சேர்ந்தவர்.
- பிராமணரல்லாதோர் இன் உணர்வுகளை தட்டி எழுப்பி பல நூற்றாண்டு காலமாக நிலவிவரும் சமத்துவமின்மை சமூக தாழ்வுநிலை ஆகியவற்றுக்கு எதிராக அவர்களை புரட்சி செய்ய ஒருங்கிணைந்து போராட்டங்களை மேற்கொள்ள செய்தார்.
- இவர் எழுதிய முக்கிய நூல் குலாம்கிரி (அடிமைத்தனம்) என்பதாகும். இவர் 1851-ல் பூனேவில் பெண்களுக்கு எந்த ஒரு பள்ளியும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு பள்ளியும் தனது துணைவியார் சாவித்திரியின் உதவியோடு தொடங்கினார்.
- தீண்டத்தகாதவர்களாக ஒரு பள்ளியும் கைம்பெண்களின் குழந்தைகளுக்காக ஒரு இல்லத்தையும் நிறுவினார்.
- பிற்காலத்தில் மகாராஷ்டிராவில் பிராமணரல்லாதார் இயக்கம் இவருடைய பணிகளால் தோன்றியது.

**பண்டிய ராமாபாய் 1858 லிருந்து 1922:-**

- இந்தியாவில் பெண் விடுதலைக்காக போராடிய முன்னணி தலைவர்களில் ஒருவராவார்.
- இவருக்கு பண்டித் சரஸ்வத் என்னும் பட்டங்கள் வழங்கப்பட்டது.
- 1878-ல் கல்கத்தாவிற்கு சென்றார். 1880-ல் சமூகத்தின் கீழ்மட்ட குடும்பத்தைச் சார்ந்த ஒரு வங்காளி திருமணம் செய்து கொண்டார்.
- இரண்டு ஆண்டுகளில் அவரது கணவர் இயற்கை எய்தினார். பின்னர் பூனே திரும்பி ரானடே பண்டார்கர் ஆகி தலைவர்களின் உதவியுடன் ஆரிய மகிளா சமாஜ் எனும் அமைப்பை நிறுவினார்.
- 1882-ல் இவ்வமைப்பில் 300 பெண்கள் கல்வி கற்றனர். ரானடே பண்டார்கர் ஆகியோரின் உதவியோடு கைவிடப்பட்ட தேவைகளுக்காக சாரதா சதன் எனும் அமைப்பை தொடங்கினார்.
- இந்து பெண்களை கிறிஸ்துவ மதத்திற்கு மதமாற்றம் செய்கிறார் என குற்றம் சாட்டப்பட்டது தனது செயல்பாடுகளை பூமிக்கு அருகே உள்ள சேத்கான் என்னும் இடத்திற்கு மாற்றினார்.
- இங்கு முக்தி சதன் (சுதந்திர இல்லம்) என்னும் அமைப்பை நிறுவி 2000 பெண்களும் குழந்தைகளும் தங்கியிருந்தனர்.

**ஸ்ரீ நாராணய குரு:-**

- இவர் கேரளத்தைச் சேர்ந்தவர்.
- உயர் சாதியினருக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடையே ஏற்பட்ட முரண்பாடுகளில் இருந்து தோன்றியது இவ்வியக்கம்.
- ஸ்ரீநாராயணகுருகள் இறக்குவதை தொழிலாகக் கொண்ட கேரளத்து ஈழவ சமூக இயக்கத்தின் ஈட்டி முனையாக விளங்கினார்.
- ஈழவர்கள் கேரள மக்கள் தொகையில் தனி பெரும்பான்யைகாய 26 சதவீதம் உள்ளனர். இவர்கள் 1908ஆம் ஆண்டு ஸ்ரீ நாராயன குரு தர்ம பரிபாலன் யோகம் எனும் அமைப்பை நிறுவினார்.

- இவ்வமைப்பு பொதுப் பள்ளியில் சேர்வதற்கான ஒருமை அரசு பணிகளில் அமர்த்தப்படும் சாலை மற்றும் கோவில்களுக்கு செல்வதற்கான உரிமை மற்றும் அரசியல் பிரதிநிதித்துவம் போன்ற பிரச்சினைகளை கையில் எடுத்தது.
- கவிஞர் குமரன் ஆசான் டாக்டர் பல்பு சகோதரன் அய்யப்பன் போன்ற மகத்தான ஆளுமைகள் இவ்வியக்கத்தில் இருந்து தோன்றி கேரள சமூகத்தை ஜனநாயக படுத்துவதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினர்.
- வைக்கம் சத்தியாக்கிரகத்தில் நேரடியாக பங்கு பெறரிட்டாலம் கோவிலை சுற்றியுள்ள தெருக்களில் ஈழவர்கள் நுழைவதற்கான தடைகளை எதிராக போராட்டங்களை ஏற்பாடு செய்தார்.

**இஸ்லாமிய சீர்திருத்த இயக்கங்கள்:-**

- 1857 இறைச்சிக்கு முஸ்லிம்களே காரணம் என்று ஆங்கிலேயர்கள் சந்தேகித்தனர் இது தெற்காசிய முஸ்லிம்கள் மீது பாதகாமான தாக்கத்தை ஏற்படுத்தியது.
- இதனால் முஸ்லிம்கள் கல்வியிலும் அரசு வேலை வாய்ப்புகளும் பின்தங்கி இருந்தனர் இதனால் சில சீர்திருத்த இயங்கள் தோன்றின.

**அலிகார் இயக்கம் 1875**

- சையது அகமது கால் ஆல் இந்த இயக்கம் தொடங்கப்பட்டது
- மேற்கத்திய அறிவியல் கல்விக்கும் குர் ஆனின் போதனைகளுக்கு மிடையே ஒத்திசைவு ஏற்படுத்த அவர் விரும்பினார்.
- இவருடைய பத்திரிக்கை தத்கிப்-ஒல்- அக்லுக் (பழக்கவழக்கங்களையும் ஒழுக்க நெறிகளையும் மேம்படுத்துதல்) மூலம் இவருடைய கருத்துக்கள் பரப்பப்பட்டது.
- இயக்கத்தின் கொள்கைகள் முஸ்லிம்கள் இஸ்லாமின் மேல் கொண்டிருக்கும் பற்றினை பலவீன படுத்தாமல் நவீன கல்வியை அவர்களுடைய பரப்புதல் மற்றும் பர்தா முறை பலதாரமணம் கைம்பெண் மறுமணம் விகாகரத்து போன்றவற்றோடு தொடர்புடைய சமூக சீர்திருத்தங்கள்.
- 1864-ல் அறிவியல் கழகம் என்னும் அமைப்பை ஏற்படுத்தினார். 1864-ல் காஜிப்பூர் நவீன பள்ளி ஒன்றை நிறுவினர்.
- 1868-ல் நவீன கல்வியை தொடங்குவதற்காக பல மாவட்டங்களில் கல்வி குழுக்கள் அமைக்கப்படுவதை ஊக்கப்படுத்தினார். 1869 முதல் 1870-ல் ஐரோப்பா சென்ற போத இந்திய முஸ்லிம்களுக்காக ஒரு மாபெரும் கல்வி நிறுவனம் என்ற தனது வாழ்நாள் பணிக்கான திட்டத்தை உருவாக்கினார்.
- முஸ்லிம்களுக்கு ஆங்கில கல்வியை பரப்புவதற்காக 1875-ல் அலிகாரில் ஒரு நவீன முகமதிய பள்ளியை தொடங்கினார். இது 1877-ல் முகமதியான் ஆங்கில ஓரியண்டல் கல்லூரியாக வளர்ச்சி பெற்றது.
- இவருடைய மறைவுக்குப் பின்னர் இக்கல்லூரி ஒரு பல்கலைக்கழகமாக வளர்ந்தது.
- இந்திய முஸ்லிம்களுக்கு இடையே தாராளவாத கருத்துக்களை பரப்புவதற்காக 1886-ல் சையத் அகமது கான் ஆங்கிலேய கீழை தேயவிய தேசிய கல்வி மாநாட்டை தொடங்கினார்.
- இவருடைய முயற்சியினாலி வைதீக இறையியலாளர்களின் தீவிர தாக்குதல்களை அவர் உடனடியாக எதிர்கொள்ள நேர்ந்தது.

**அகமதி இயக்கம் 1835 – 1908 :-**

- மிர்சா குலாம் அகமது என்பவரால் இவ்வியக்கம் 1889-ல் உருவாக்கப்பட்டது
- குர் ஆனின் சொல்லப்பட்டுள்ள உண்மையான கொள்கைகளுக்கு திரும்ப வேண்டும் என்று கூறிய அவர் தன்னை ஒரு தீர்க்கதரிசி என கூறி சர்ச்சையை ஏற்படுத்தினார்.
- இவருடைய முக்கிய பணி ஆரிய சமாஜமும் கிறிஸ்தவ சமயப் பரப்பாளர்கள் இஸ்லாமுக்கு எதிராக வைத்த விவாதங்களை எதிர்கொண்டு மறுத்ததாகும்.
- இவ்வியக்கம் பலதார மணம் பெண்கள் முகத்திரை அணிவது போன்றவற்றையும் விவகாரத்தை பொருத்தமட்டில் பழமையான விதிகளையும் பின்பற்றினார்.

**தியோபந்த் இயக்கம் 1866:-**

- இவ்வியக்கம் முஸ்லீம் கல்வியாளர்களின் வைதீக பிரிவை சார்ந்தவர்களால் மீட்டெடுப்பு இயக்கமாக இருநோக்கு உங்களுக்காக உருவாக்கப்பட்டது.
- ஒன்று குர் ஆனின் தூய்மையான கருத்துக்களையும் ஹதிஸ் எனப்படும் மரபுகளையும் பரப்புரை செய்தல்.
- மற்றொன்று அந்நிய ஆட்சியாளர்களுக்கு எதிராக ஜிகாத் (புனிதப் போர்) என்னும் உத்வேகத்தை அளிப்பது.
- முகமது காசிம் நாநோதவி ரஷித் அகமது கங்கோரி ஆகியோரால் முஸ்லிம் சமூகத்திற்கான சமய தலைவர்களுக்கு பயிற்சி வழங்கும் நோக்கத்தில் உருவாக்கப்பட்டது.
- வாலி அல்லா சிந்தனைப் பள்ளியை சேர்ந்த இறையியலாளர்களால் 1867-ல் தியோபந்தல் இறையியல் கல்லூரி ஒன்று நிறுவப்பட்டது. இவர்களின் மிக முக்கியமானவர் முஹம்மது காசிம் நாநோதவி.
- ஒரு சமய பல்கலைக்கழகமாக தியோபந்து முஸ்லிம் இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகத்திற்கே பெரும் மதிப்பு மிக்க நிறுவனம் ஆயிற்று.

**நட்வத் -அல்-உலாமா:-**

- இவ்வியக்கம் 1894-ல் லக்னோவில் சிப்லி நமானி என்னும் வரலாற்று ஆசிரியராலும் வேறுசில அறிஞர்களாலும் உருவாக்கப்பட்டது.
- நவீன மேற்கத்திய கல்வியின் வருகையைத் தொடாந்து வந்த இறைமறுப்பு கொள்கை எதிர்கொள்ள அறிவார்ந்த முறையில் சமயத்திற்கு விளக்கம் அளிப்பததை நோக்கமாகக் கொண்டிருந்தது.

**பீரங்கி மஹால்:-**

- மூன்றாவதாக புகழ்பெற்ற ஆனால் மற்றவற்றைக் காட்டிலும் காலத்தால் மூத்த இச்சிந்தனை பள்ளி லக்னோவில் உள்ள பீரங்கி மஹாலில் உருவானது.
- மற்ற இரண்டை போல் அல்லாமல் பள்ளி சூபியஸத்தை மதிப்பு வாய்ந்த அனுபவமாகவும் அறிந்து கொள்வதற்கான களமாகவும் ஏற்றுக்கொண்டது.
- மற்றொரு மரபு சாாந்த இயக்கம் அல்-இ-ஹதித் அல்லது நபிகள் நாயகம் கூறியவற்றை அப்படியே பின்பற்ற வரலாயினர்.

**பார்சி சீர்திருத்த இயக்கங்கள்:-**

- ஜொராஸ்டிரியர்கள் பத்தாம் நூற்றாண்டில் பெரும் எண்ணிக்கையில் இந்தியாவின் மேற்கு கடற்கரைப் பகுதியில் குடியேறினர். 1851-ல் கல்வி பயின்ற பார்சிகள் அடங்கிய குழுவானது ரக்னுமய் மத்யஸ்னன் சபா எனும் அமைப்பை பாரசீகர்களின் சமூக நிலைகளை மேம்படுத்தவும் உருவாக்கினர்.
- இவ்வியக்கம் நௌரோஜி பர்தோன்ஜி தாதாபாய் நௌரோஜி காமா பெங்காலி ஆகியோரை தலைவர்கள் கொண்டிருந்தது.
- சீர்திருத்தம் பற்றிய செய்திகளை பரப்புவதற்காக ராஸ்ட்-கோப்தார் (உண்மை விளம்பி) என்னும் செய்திகளை வெளியிட்டது.
- இந்தியாவை தொழில்மயம் ஆக்குவதில் முக்கிய பங்கு வகித்தனர்.

**சீக்கிய சீர்திருத்தம் இயக்கம்:-**

- 1873-ல் சிங் சபா இயக்கம் இரண்டு முக்கிய நோக்கங்களுக்காக உருவானது.
- நவீன மேற்கத்திய கல்வியை சீக்கியருக்கு கிடைக்கச் செய்தல்
- மற்றொன்று கிறிஸ்துவ சமயப் பரப்பாளர்கள் இன் மதமாற்ற நடவடிக்கைகளில் நடவடிக்கைகள் இந்து மீட்டெடுப்பு இயக்கவாதிகள் நடவடிக்கைகள் ஆகியவற்றை எதிர்கொள்வது.
- அகாலி இயக்கம் சிங் சபா இயக்கத்தின் கிளை இயக்கமே
- அகாலி இயக்கம் சீக்கிய குருத்வாராவை ஊழல் மிகுந்த உதாசி மகந்த் என்று அறியப்பட்ட மதகுருமார்களின் கட்டுப்பாடுகளில் இருந்து விடுவிப்பதே நோக்கமாக கொண்டது.
- 1922-ல் சீக்கிய குருத்வாரா சட்டத்தை ஏற்றினர் 1925-ல் திருத்தப்பட்டது இதன்படி சீக்கிய குருத்வாரா சிரோன்மணி குருத்வாரா பிரபந்தக் கமிட்டி என்னும் அமைப்பின் கீழ் வந்தது.

**தமிழ்நாட்டில் சீர்திருத்த இயக்கங்கள்:-**

**வைகுண்ட சுவாமிகள் 1809 – 1851:-**

- ஸ்ரீ வைகுண்ட சுவாமிகள் வழிபாடு 1830-ல் நிறுவப்பட்டது
- திருவிதாங்கூரில் இன்றைய கன்னியாகுமரி மாவட்டம் சாஸ்தா கோவில்விளை தற்போது சாமிதோப்பு என்று அழைக்கப்படுகிறது என்றும் சிறிய ஊரில் 1809-ம் ஆண்டு ஏழைக்குடும்பத்தில் பிறந்தார்.
- இவர் விவிலியத்தை கற்றார் கிறிஸ்துவதிலும் சிறந்து விளங்கினார்.
- இவர் 22 வயதில் திருச்செந்தூர் முருகன் கோவிலுக்கு சென்று கடலில் புனித நீராடும் போது தனது சரும நோய் நீங்கப் பெற்றார்.
- விஷ்ணு தன்னை மகனாக பாவித்து மறுபிறவி அளித்ததாக அறிவித்தார்.
- அதிக வரிவசூல் செய்யும் அரசையும் கடுமையாக விமர்சித்தார். அரசுக்கு எதிராக பேசினால் அதனால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார் 1838 விடுதலை செய்யப்பட்டபோது ஒடுக்கப்பட்ட மக்களிடையே மிகவும் பிரபலமானார்.
- இவருடைய சீடர்கள் இவரை ஐயா என்று அழைத்தனர் இவர்களை பின்பற்றியவர்கள் ஐயாவழி என்று அழைக்கப்பட்டது.
- இவருடைய போதனைகள் தொகுக்கப்பட்டு அகிலத்திரட்டு என்னும் வழிபாட்டு நூலாக வெளிவந்தது.
- இவர் பீடம் வழிபாட்டு முறையை கைவிடும் படி தன்னை பின்பற்ற ஓரிடம் கூறினார் சைவ உணவு பழக்கத்தை வலியுறுத்தினார்.
- அக்காலத்தில் தலைப்பாகை அணிவது உயர் சாதியினருக்கு மட்டுமே அளிக்கப்பட்டிருந்தது.
- இவர் சமபந்தி விருந்துகளை ஏற்பாடு செய்தார். நிழல் தாங்கல் என்று அழைக்கப்பட்ட அவர் உருவாக்கிய உணவுக் கூடங்களில் ஜாதி கட்டுப்பாடுகள் உடைக்கப்பட்டன.
- 1851-ல் அவருடைய இறப்பிற்குப பின்னரும் வைகுண்ட சுவாமிகள் வழிபாடானது தென் திருவாங்கூர் பகுதியில் கிறிஸ்தவ சமயம் பரப்புவதற்கு பெரும் சவாலாக விளங்கியது.

**ராமலிங்க அடிகளார் 1823 – 1874:-**

- வள்ளலார் என அழைக்கப்படுகிறார். சிதம்பரத்திற்து அருகே ஒரு ஏழை குடும்பத்தில் பிறந்தார்.

- தேவார திருவாசகப் பாடல்களில் ஈர்க்கப்பட்டார். இவருடைய காலத்தில் சைவ சமயமானது திருவாடுதுறை தருமபுரம் திருப்பனந்தாள் போன்ற சைவ மடங்களில் ஆதிக்கத்தில் இருந்தது.
- இவருடைய பாடல்களில் முற்போக்கு சிந்தனைகள் கொண்டிருந்தன. இவர் சத்திய தரும சாலை ஒன்றை வடலூரில் நிறுவி ஏழைகளுக்கு உணவளிக்க தொடங்கினார்.
- 1860-களில் பஞசமும் கொள்கை நோயும் ஏற்பட்ட போது ஜாதி மத வேறுபாடின்றி உணவளித்தார்.
- இவரைப் பின்பற்றுவோரை ஒருங்கிணைப்பதற்கான சத்திய ஞான சபை என்னும் அபைபை நிறுவினார் இதனால் சைவ அமைப்புகளோடு அவர் மோதல் துவங்கியது.
- இவருடைய சீடர்கள் அவருடைய பாடல்களை திரட்டி திருவருட்பா என்னும் பெயரில் 1867-ல் வெளியிட்டது மோதல் உச்சகட்டத்தை அடைந்தது.
- ஆறுமுக நாவலர் இவருக்கு எதிராக கட்டுரை எழுதும் போரில் ஈடுபட்டார் ஆனால் இறுதியில் ராமலிங்க அடிகளாரின் பணி அங்கீகரிக்கப்பட்டது.

**அயோத்திதாச பண்டிகர்:-**

- பௌத்த மத்தின் மீட்டுருவாக்கம் இவர்.
- 1867-ல் சீவகசிந்தாமணி 1898-ல் மணிமேகலை ஆகிய இரண்டும் முழுமையாக அச்சிடப்பட்டு வெளியிடப்பட்ட இந்த பின்னணியில் மிக முக்கியமான ஆளுமை அயோத்திதாச பண்டிதர் ஆவார்.
- இவரது காலம் 1845 இல் இருந்து 1914
- ஒரு சுதேசி மருத்துவராக தொழில் செய்தாலும் அவர் பல்வேறு துறைகளில் புலமை பெற்றிருந்தார்.
- 1890களில் ஆதிதிராவிடர்களுக்கு இடையே இயக்கத்தை தொடங்கிய இவர் ஆதிதிராவிடர்களை உண்மையான பௌதர்கள் என்றும் வேத பிராமணியத்தை எதிர் விளைவாக அவர்கள் தீண்டத்தகாதவர்களாக ஆக்கப்பட்டனர் என்னும் வாதிட்டார்.
- இவருடைய கொள்கைகள் வட தமிழக பகுதியில் அதிக எண்ணிக்கையில் மக்கள் பின்பற்றினர்.
- கோலார் தங்க வயலில் பணியாற்றிய தொழிலாளர்கள் பலர் இவரது கொள்கையை பின்பற்றினர்.
- இவ்வியக்கத்தில் சிங்காரவேலரும் லட்சுமி நரசுவும் முக்கிய பங்காற்றினர்.
- அயோத்திதாச பண்டிதர் 1908 முதல் ஒரு பைசா தமிழன் (பின்னர் தமிழன்) என்ற பெயரில் வாராந்திர பத்திரிகை ஒன்றை தொடங்கி தான் இயற்கை எய்தும் வரை நடத்தினார்.

**கிறிஸ்துவ சமய பரப்பு நிறுவனங்கள்:-**

- இடைக்கால இந்தியாவை சார்ந்த முஸலிம் மன்னர்களைப் போலவே ஆங்கிலேயே கிழக்கிந்திய கம்பெனியும் இந்திய மக்களின் மத விஷயங்களில் நடுநிலைமை கொள்கையை பின்பற்றியது.
- போர்ச்சுக்கீசியரின் கட்டாய மத மாற்றம் முயற்சிகளே. இதற்கான காரணம் போர்ச்சுகீசியர்களின் வீழ்ச்சிக்கு காரணம் அவர்களின் கட்டாய மதமாற்றம் என அவர்கள் நம்பினர்
- இதனால் கம்பெனி தனது ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் சமயப் பரப்பாளர்கள் நுழைவதற்கு தடை விதித்தது.
- 1793-ல் பாப்ஸ்டுகள் வில்லியம் கேரி மற்றும் ஜான் தாமஸ் ஆகிய இருவரும் சமய பரப்பு நிறுவனத்தை தொடங்கும் நோக்கில் இந்தியா வந்தனர்.
- இவர்கள் டேனியர்களுக்கு சொந்தமான கல்கத்தாவிற்கு வடக்கே உள்ள செராம்பூரில் தங்கினர்.
- கேரி வேறு இரு சமயப் பரப்பாளர்கள் ஆன ஜோஷ்வா மார்ஷ்மேன் மற்றும் வில்லியம் வார்டு ஆகியோருடன் இணைந்து 1799-ல் செராம்பூர் மிஷன் என்னும் அமைப்பை ஏற்படுத்தினார்.
- செராம்பூர் மத பரப்பாளர்கள் முதல் முதலாக இந்தியாவிற்கு வருகை தந்த நற்செய்தி மறைப்பணியாளர்கள் அவர்.
- இவர்களைத் தொடர்ந்து சீர்திருத்த கிறிஸ்தவ சமயத்தின் பல பிரிவுகளை சேர்ந்த மத பரப்பாளர்கள் இந்தியா வந்தனர். இவர்களுக்கும் சில நூற்றாண்டுகளுக்கு முன்பாக பல கிறிஸ்துவ மத பரப்பு நிறுவனங்கள் போர்ச்சுக்கீசியர்கள் சொந்தமான கோவாவிலும் மலபார் கடற்கரை பகுதிகளும் செயல்பட்டனர்.
- மத பரப்பு குழுவினர் சமூக பொருளாதார ரீதியாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கென் பள்ளிகளை நிறுவினார்.
- இவர்களுக்கு அரசு பணிகளில் பணியமர்த்தும் அதன்மூலம் பொருளாதார நிலையை மேம்படுத்த முயன்றனர்.
- பொதுச் சாலையை பயன்படுத்துதல் தாழ்த்தப்பட்ட பெண்கள் மேலாடை அணிந்து கொள்வது போன்ற சமூக உரிமைகளுக்காகவும் சமய குழுவினர் பேராடினர்.
- பஞ்சங்களின் போது சமயப் பரப்பு குழுவினர் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.
- பஞ்ச சாலங்களில் திருநெல்வேலி மாவட்டத்தில் பல கிராமங்கள் கிறிஸ்துவ மதத்தை தழுவினர்.
- இதே போல் ஆந்திராவில் மாலா மடிகா சமூகத்தைச் சார்ந்த மக்கள் பெரும் எண்ணிக்கையில் மதம் மாறினர்.

**சீர்திருத்த இயக்கங்களின் முக்கியத்துவம்:-**

- சமூகத்தின் வைதிக பிரிவை சார்ந்த ஒரு ஆள் சமய சமூக சீர்திருத்தவாதிகளின் அறிவியல் சித்தாந்த எதிர்ப்புகளை ஏற்றுக்கொள்ள முடியவில்லை இதன் விளைவாக சீர்திருத்தவாதிகள் தோற்றனர் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட அவர்களுக்கு எதிராக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.
- கொலை முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இருந்தபோதிலும் எதிர்ப்புகளை மீறி இவ்வியக்கங்கள் அச்சத்தின் காரணமாக இணைந்து சென்ற தனிமனிதர்களின் விடுதலைக்கு பங்களிப்பைச் செய்தன.

- மேலைநாட்டு குறிப்பாக ஆங்கில நாகரீகத்தின் எதிர்விளைவு இந்திய மறுமலர்ச்சி ஆகும்.
- இந்திய சீர்திருத்த இயக்கங்களின் பங்களிப்பு இந்து சமயத்தை எளிமை ஆக்கியது இந்தியாவின் பண்டைய கால பெருமையை உலகறியச் செய்தது.
- இவ்வியங்கங்கள் சுய நம்பிக்கையும் சுயசார்பு அமையும் சுதந்திர உணர்வையும் ஏற்படுத்தி இந்திய விடுதலை இயக்கத்திற்கு ஒத்திகையாக இருந்தது எனவே இந்திய சமய சமூக சீர்திருத்த மறுமலர்ச்சி இயக்கத்தை மனவளர்ச்சி இயக்கம் என்று கூறுவது பொருத்தமாக இருக்கும்.

**இந்திய தேசியத்திற்கு முன்பிருந்த அமைப்புகள்:-**

**இளம் வங்காள இயக்கம் 1808:**

- தொடங்கியவல் ஹென்றி விவியன் டெரொஷியஸ். இவர் கொல்கத்தாவின் இந்து பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் வங்காள இளைஞர்களின் சாக்ரடீஸ் ஆக கருதப்படுபவர்.

**வங்காள பிரிட்டிஷ் இந்திய சங்கம் 1843:-**

- இந்த சங்கம் தோன்ற காரணமானவர் ஜார்ஜ் தாம்சன் இவர் ஸ்காட்லாந்து நாட்டைச் சார்ந்தவர்
- வங்காள நிலச்சுவான்தார்கள் சங்கம் லண்டனில் தொடங்கியவர்.

**பங்கபாஷியா பிரகாசிகா சபை 1863:-**

- ராஜாராம் மோகன் ராய் ஆதரவாளர்களால் தொடங்கப்பட்டது இது வங்காளத்தில் தோன்றிய முதல் அரசியல் சார்ந்த அமைப்பு.

**வங்காள நிலச்சுவான்தார்கள் சங்கம் 1838:-**

- இது துவாரத்நாத் தாகூரின் ஆலோசனைப்படி தொடங்கப்பட்டது. இச்சங்கம் ராஜாராம் மோகன்ராய் இன் கொள்கையின் முன்னுதாரணமாகக் கொண்டு வங்காளத்தில் செயல்பட்டது.

**பிரிட்டிஷ் இந்திய கழகம் 1851:-**

- இது வங்காளத்தில் தொடங்கப்பட்டது. இதைத் தொடங்கியவர் தாதாபாய் நவரோஜி.
- இவர் இந்தியாவின் முதுபெரும் மனிதர் என அழைக்கப்படுகிறார்.

**கிழக்கிந்திய கழகம் 1856:-**

- இது லண்டனில் தொடங்கப்பட்டது. இதைத் தொடங்கியவர் தாதாபாய் நவரோஜி

**பம்பாய் அசோஷியேஷன் 1852:-**

- இதன் தலைவர்களில் முக்கியமானவர் தாதாபாய் நவரோஜி. இக்கழகம் இந்திய நிர்வாக முறையை கடுமையாக விமர்சித்து பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கு விண்ணப்பம் அனுப்பியது.

**சென்னைவாசிகள் சங்கம் 1852:-**

- இது வங்காள பிரிட்டிஷ் இந்திய கழகத்தின் கிளையாக தொடங்கப்பட்டது.
- இதன் தலைவர் சி ஏகாம்பர் முதலியார்.
- இச்சங்கத்தின் பிரபலமானவர் லட்சுமண நரசு செட்டி
- இது தென்னிந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் அரசியல் சார்ந்த அமைப்பாகும்.

**பூனா கழகம் 1867:-**

- 1867-ல் தொடங்கப்பட்ட போன கழகம் 1873 சர்வஜனிக் சபை என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- இதன் பாசறையில் வளர்ந்த தலைவர்கள் ரானடே கோகுலே திலகர் தக்காணத்தில் சுதேசி இயக்கத்தை தொடங்கிய இக்கழகமே

**இந்திய லீக் 1875:-**

- இதைத் தொடங்கியவர் சுஷில்குமார் கோஸ். மக்களிடையே தேசிய உணர்வை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

**பம்பாய் ராஜதானி கழகம் 1885:-**

- இதைத் தொடங்க காரணமானவபட பத்ருகீன் தியாப்ஜி மற்றும் பெரோஸா மேத்தா.
- தேசிய தந்தி சங்கத்தை அமைப்பதற்கான முயற்சியை மேற்கொண்டது.

**சென்னை மகாஜன சபை 1884:-**

- இதன் தலைவர் ரெங்கைய நாயுடு. இதன் செயலாளர் விஜயராகவாச்சாரி மற்றும் ஆனந்த சார்லு

**இந்திய தேசிய மாநாடு 1885:-**

- இதைத் தொடங்கியவர் எஸ்.என.பானர்ஜி
- கல்கத்தாவில் தொங்கப்பட்டது.
- பேனர்ஜி இந்தியாவின் பர்க் என அழைக்கப்படுகிறார்
- பானர்ஜியால் தொடங்கிய பிற அமைப்புகள்
- அரசியல் சீர்திருத்தங்கள் கோரி இந்திய கழகத்தை 1876 தோற்றுவித்தார்.
- இந்திய தேசிய பேரவை 1883
- இந்தியன் பைரல் பெடரேஷன் 1920.
- இந்திய தேசிய பேரவையானது 1886 INC இணைக்கப்பட்டது
- ICS தேர்வில் வெற்றி பெற்ற முதல் இந்தியர் S N பானர்ஜி.